**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
*******

2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 – ம் நாள் வெள்ளிக்கிழமை
******

**இடைமனு எண்.3/2020–ல் அசல் வழக்கு எண்.232/2020**

1. அனிதா
2. மகேஷ் .....மனுதாரர்கள்/வாதிகள்

...எதிராக...

1. கருணாகரன்
2. மனோகரன்
3. இளங்கோவன்
4. இளவரசன், சார்பாக அவரின் அதிகாரம் பெற்ற முகவர் 6–ம் எதிர்வாதி கலையரசி மூலமாக
5. தமிழரசி
6. கலையரசி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 12.12.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்களும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

வழக்கு A அட்டவணை சொத்துக்களை மனுதாரர்கள்/வாதிகள் அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகளோ அவர்களை சார்ந்தவர்களோ அல்லது முகவர்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க அசல் வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால

உறுத்துக்கட்டளை உத்தரவு கோரி உ.வி.மு.ச கட்டளை –39, விதி 1, 2–ன் படி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் சீர்காழி தாலுக்கா, 80, ராதாநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ளது. முதல் வாதி, 2–ம் மனுதாரரின் மனைவி ஆவார். வழக்கு சொத்துக்கள் A மற்றும் B அட்டவணை சொத்துக்களாக பிராதில் கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்களில் A அட்டவணை சொத்துக்கள் முதல் வாதிக்கு சொந்தமானது. வழக்கு A அட்டவணை சொத்துக்கள் ஆரம்பத்தில் முத்தம்மாள் என்பவருக்கு சொந்தமாக இருந்தது. முத்தம்மாள் 04.08.1995 அன்று இறந்துவிட்டார். இறந்த முத்தம்மாளுக்கு அவருடைய ஒரே மகள் விசாலம் என்பவர் மட்டுமே வாரிசாவார். A அட்டவணை சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், B அட்டவணை சொத்துக்கு விளம்பல் பரிகாரமும் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) வழக்கு A அட்டவணை சொத்துக்களை இறந்த முத்தம்மாள் 30.12.1947 அன்று ஆவண எண்.346/1948 படி செல்வநாயகம் பிள்ளை அவர்களிடமிருந்தும், 03.11.1948 அன்று ஆவண எண்.596/1948 படி சொக்கலிங்க படையாட்சி வகையாறாவிடமிருந்தும், 09.10.1948 அன்று ஆவண எண்.129/1949 படி அம்பலவாணன் பிள்ளையிடமிருந்தும் மற்றும் 04.04.1949 அன்று அமிர்தலிங்கம் பிள்ளையிடமிருந்தும் கிரயம் வாங்கி உள்ளார். முத்தம்மாள் இறப்பிற்கு பிறகு வழக்கு A அட்டவணை சொத்துக்களை வாரிசு முறையில் அவரது மகள் விசாலம் என்பவருக்கு கிடைத்தது. ஆனால் முத்தம்மாள் கிரயம் வாங்கிய காலம் முதல் A அட்டவணை சொத்துக்களை 2–ம் மனுதாரர்/2–ம் வாதியின் தந்தையும் முத்தம்மாளின் சகோதரருமான அரங்கசாமி

தான் முத்தம்மாளுக்காக 1948 முதல் மேற்படி நிலங்களை வசத்தில் வைத்து தன் பெயரில் மின் மோட்டார் இணைப்பு பெற்று அனுபவித்து வந்து முத்தம்மாளுக்கு உரிய குத்தகையை செலுத்தி வந்தார். முதல் வாதி 15.07.2013 அன்று A அட்டவணை சொத்துக்களை விசாலத்திடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் ஒரு பதிவு பெற்ற கிரய பத்திரத்தின் மூலம் கிரயம் வாங்கி வசத்தில் வைத்து உரிமையளராக அனுபவித்து வருகிறார்.

(iii) வழக்கு A அட்டவணை சொத்துக்களில் முதல் வாதி தவிர வேறு யாருக்கும் எந்த உரிமையோ, வசமோ, அனுபவமோ கிடையாது. முதல் வாதி அரசு பணியில் இருப்பதாலும், பெண்மணி ஆனதாலும் வழக்கு A அட்டவணை சொத்துக்களை முதல் வாதியின் கணவரான 2-ம் மனுதாரர்/2-ம் வாதி சாகுபடி செய்தும் பராமரித்தும் வருகிறார். எனவே மனுதாரர்கள்/வாதிகள் இருவரும் A அட்டவணை சொத்துக்களுக்கு இந்த வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ளனர். முதல் வாதி வழக்கு A அட்டவணை சொத்துக்களை அளவீடு செய்யவும், பட்டா பெயர் மாற்றம் செய்யவும் சீர்காழி வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்ததை தெரிந்து கொண்ட முதல் பிரதிவாதி, வாதியாக இருந்து இந்த வழக்கு முதல் வாதி மற்றும் திருவெண்காடு குறுவட்ட நில அளவையர் மற்றும் அளவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அசல் வழக்கு எண்.112/2020-ல் வழக்கு A அட்டவணை சொத்துக்களை அளவீடு செய்யக்கூடாது என்றும், அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி புல எண்.75-ல் உள்ள மொத்த பரப்பான **2** ஹெக்டேர் 15.50 ஏர்ஸ் புஞ்சைக்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

(iv) புல எண்.75-ல் உள்ள மொத்த பரப்புக்கோ அதில் உள்ள ஒரு பாகத்திற்கோ முதல் பிரதிவாதி நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தொடர உரிமையில்லை. புல எண்.75-ல் 3 ஏக்கர் 68 செண்டைப் பொறுத்து முதல் வாதி உரிமையாளர் ஆவார். பாக்கி 33.50 ஏர்ஸ் அதாவது 83 செண்ட் முத்தம்மாளுக்கு உரிமையானது. அது முத்தம்மாளின் வாரிசுகளுக்கு மட்டுமே

சொந்தமானது. ஆனால் அதையும் பிரதிவாதிகள் தங்களுக்கு சொந்தமானதாக ஆவண எண்.1591/2013 ஆக 08.08.2013 அன்று ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். அந்த ஆவணம் செல்லதக்கதல்ல. முதல் பிரதிவாதி 2 முதல் 6 பிரதிவாதிகளின் சகோதரர் ஆவார். மேற்படி அசல் வழக்கு 112/2020–ஐ முதல் பிரதிவாதி தாக்கல் செய்துவிட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் வழக்கு A அட்டவணை சொத்துக்களை மனுதாரர்கள்/வாதிகள் அனுபவிப்பதை இடையூறு செய்ய போவதாக 29.11.2020 முதல் பலர் அறிய பகிரங்கமாக கூறி மிரட்டி, அச்சுறுத்தி வருகிறார்கள். அப்படி செய்ய எதிர்மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. வழக்கு A அட்டவணை உரிமையோ, தொடர்ச்சியோ, அனுபவமோ கிடையாது. 1 முதல் 6 பிரதிவாதிகள் ஆட்கள் பலமும், பண பலமும் மிக்கவர்கள் எதையும் செய்யக்கூடியவர்கள் சட்டத்தை மதிக்காதவர்கள்.

(v) எனவே 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சட்டபுறம்பான செய்கையை இந்நீதிமன்ற தடை உத்தரவு இருந்தல் மட்டுமே மனுதாரர்கள்/வாதிகளால் தடுக்க முடியும். இல்லாவிட்டால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே வழக்கு A அட்டவணை சொத்துக்களை மனுதாரர்கள்/வாதிகள் அனுபவிப்பதை எதர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகளோ அவர்களை சார்ந்தவர்களோ அல்லது முகவர்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க அசல் வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>அசல் வழக்கில் 1 முதல் 6 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இம்மனுவிற்கு எதிருரையாக குறிப்பாணையின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதின் சுருக்கம்.</u>**

(i) வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. நிலை நிற்க கூடியதல்ல. பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர

வாதிகள் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல. தாவா சொத்து சீர்காழி தாலுக்கா, 80 ராதா நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ளது என்பது உண்மை. முதல் வாதி, 2–ம் வாதியின் மனைவி என்பது உண்மை. வழக்கு சொத்துக்களில் A அட்டவணை சொத்து முதல் வாதிக்கு சொந்தமானது கிடையாது. அதனை நிரூபிக்க வாதிகள் கடமைப்பட்டுள்ளனர். வழக்கு A அட்டவணை சொத்துக்கள் முத்தம்மாள் என்பவருக்கு உரிமையானது என்பதை வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர். முத்தம்மாளுக்கு விசாலம் என்பவர் வாரிசுதாரர் கிடையாது. முத்தம்மாளுக்கு கணவர் சிவலிங்கம் மற்றும் அவரது மகள் விசாலம் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி சிவலிங்கம் என்பவர் முத்தம்மாளின் சகோதரியான நாகரெத்தினம் என்பவரை முத்தம்மாள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். சிவலிங்கம் என்பவருக்கு நாகரெத்தினத்தின் மூலம் 2 பெண் குழந்தைகள், 2 ஆண் குழந்தைகள் உள்ளனர்.

(ii) தாவா A அட்டவணை சொத்துக்கள் முத்தம்மாள் பெயரில் கிரயம் ஏற்பட்டிருந்தாலும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் கஞ்சமலையின் பணத்தை கொண்டு கஞ்சமலையின் உடன்பிறந்த சகோதரியான முத்தம்மாள் பெயரில் பெயரளவில் கஞ்சமலையால் கிரயம் வாங்கப்பட்ட சொத்தாகும். தாவா A அட்டவணை சொத்துக்கள் முத்தம்மாளின் பெயரில் கிரயம் வாங்கப்பட்டிருந்தாலும் கிரய தேதி முதல் தாவா சொத்துக்கள் கஞ்சமலையின் உரிமையிலும், அனுபவத்திலும், வசத்திலும் தான் இருந்து வந்தது. அதனால் தாவா சொத்துக்களை பொறுத்து கஞ்சமலை பெயரில் நில உடமை மேம்பாட்டு திட்டப்படி பட்டாவும் அரசால் வழங்கப்பட்டது. தாவா A அட்டவணை சொத்துக்கள் எந்த காலத்திலும் முத்தம்மாள் என்பவரின் அனுபவத்தில் இல்லை. தாவா A அட்டவணை சொத்துக்கள் முத்தம்மாள் என்பவரின் அனுபவத்திலும் இல்லாதபொழுது அவரின் மகள் விசாலம் என்பவரின் உரிமையிலும் அனுபவத்திலும் தாவா A அட்டவணை சொத்து இருந்ததாக கூறுவது தவறு.

(iii) தாவா A அட்டவணை சொத்தை 2–ம் வாதியின் தந்தை அரங்கசாமி தான் முத்தம்மாளுக்காக 1948–ம் ஆண்டு முதல் நிலங்களை வசத்தில் வைத்து மின் மோட்டார் இணைப்பு பெற்று அனுபவித்து வந்து முத்தம்மாளுக்கு குத்தகை செலுத்தி வந்தார் என்று பிராது பாரா 6–ல் கூறுவது தவறு. தாவா A அட்டவணை சொத்தை அரங்கசாமி எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை. மின் இணைப்பு அரங்கசாமி பெயரில் தாவா சொத்தில் இல்லை. தாவா A அட்டவணை சொத்திற்காக முத்தம்மாள் அரங்கசாமி குத்தகை செலுத்தவில்லை. தாவா A அட்டவணை சொத்துக்கள் கஞ்சமலை என்பவரின் உரிமையிலும், அனுபவத்திலும் அவர் இறக்கும் காலம் வரையில் இருந்து வந்து அவர் இறந்த பிறகு 1–ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது. தாவா A அட்டவணை சொத்துக்கள் 15.07.2013–ல் விசாலத்திடமிருந்து 1–ம் வாதி கிரயம் வாங்கிய கிரய ஆவணம் மோசடியானது. விசாலம் என்பவருக்கு 2012–ம் வருடம் முதல் 2 கண்களும் தெரியாது. 15.07.2013–ம் தேதியில் 1–ம் வாதி தரங்கம்பாடி கருவூலத்தில் வேலை பார்த்தார். தாவா 15.07.2013 தேதிய கிரய ஆவணம் செல்லாது என விசாலம் என்பவர் மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.44/2021 தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது. 1–ம் வாதி பெயரில் உள்ள 15.07.2013 தேதிய கிரய ஆவணம் செல்லாது. எனவே தாவா A அட்டவணை சொத்தில் 1–ம் வாதிக்கு எவ்வித உரிமையும், அனுபவமும், வசமும் கிடையாது. முதல் வாதி அரசு ஊழியர் ஆவார். 2–ம் வாதியும் அரசு ஊழியர் ஆவார். தாவா A அட்டவணை சொத்து 2–ம் வாதியின் அனுபவத்திலும், வசத்திலும் எந்த காலத்திலும் இல்லை. தாவா சர்வே எண்.75–ல் உள்ள பூரா விஸ்தீரணத்தை 1–ம் பிரதிவாதி அனுபவிப்பதை இந்த வழக்கு 1–ம் வாதி எவ்வித பரிகாரம் இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.112/2020 நம்பரில் வழக்கு தொடர்ந்துள்ளார். அசல் வழக்கு நிலுவையில் உள்ளது.

(iv) தாவா புல எண்.75–ல் உள்ள 3 ஏக்கர், 68 செண்டைப் பொறுத்து முதல் வாதி உரிமையாளர் கிடையாது. பாக்கியுள்ள 83 செண்ட் நிலமும் முத்தம்மாளுக்கு உரிமையானது கிடையாது. 08.08.2013 தேதி ஆவண எண்.1591/2013 தேதி ஆவணம் சட்டப்படி செல்லாது என 1, 2 வாதிகள் கோரமுடியாது. தாவா A அட்டவணை அனுபவிப்பதை 1 முதல் 6 பிரதிவாதிகள் இடையூறு செய்கிறார் என பிராதில் கூறுவது தவறு என்பதால் வழக்கு B அட்டவணை 1, 2, 4, 5, 6 பிரதிவாதிகள் 3–ம் பிரதிவாதிக்கு 27.12.2013–ம் தேதியிடப்பட்ட கிரயம் எழுதி பதிவு செய்த ஆவணம் செல்லத்தக்கது என்பதாலும், மேற்படி 27.12.2013–ம் தேதிய கிரய விபரம் 2–ம் வாதிக்கு கிரய தேதியில் தெரியும் என்பதாலும், இந்த வழக்கில் எவ்வித வழக்கு மூலமும் இல்லை. எனவே வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு</u>

3. மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.16 வரையிலான சான்றவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதார்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>தீர்வு:</u>

**5.** (i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்தததில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் 3–ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள 27.12.2013 தேதிய கிரய ஆவணம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி

மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனு சொத்து 15.07.2013 ஆம் தேதிய கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டதாகவும், மேற்படி கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் மா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மா.சா.ஆ.1 –ஐ பரிசீலிக்கையில் ராதாநல்லூர் வட்டம் சர்வே எண் 75–ல் புஞ்சை 2.12.5 3 ஏக்கர் 65 செண்டுக்கு 1.49.5 ஏர்ஸ் 1–ம் மனுதாரர் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மா.சா.ஆ.1–ல் புல எண் 75/4–ல் ஏக்கர் 1.04 ம், புல எண் 75/4–ல் ஏக்கர் 1.04 ம், புல எண் 75/3–ல் ஏக்கர் 1.07 ம், புல எண் 75/2–ல் ஏக்கர் 0.39 ம், புல எண் 75/2 –ல் ஏக்கர் 0.97 ம் ஆக கூடுதல் ஏக்கர் 4.51–ல் ஏக்கர் 3.68 கிரயம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு புல எண்களிலும் எவ்வளவு விஸ்தீரணம் விசாலம் என்பவர் 1–ம் மனுதாரருக்கு கிரயம் செய்துகொடுக்கப்பட்டது என்ற விவரம் காணப்படவில்லை. மொத்தம் 4 ஏக்கர் 51 செண்டில் 3 ஏக்கர் 68 செண்ட் கிரயம் பெற்றதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) மா.சா.ஆ.2 பரிசீலிக்கையில் 1–ம் எதிர்மனுதாரர் இம்மனுவின் 1–ம் மனுதாரர் மற்றும் 5 நபர்கள் மீது இவ்வழக்குச் சொத்தான ராதாநல்லூர் கிராமம் புஞ்சை சர்வே எண் 75 ஹெக்டர் 2.15.50 ஏர்ஸ் முழுமைக்கும் நிரந்தரஉறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியவருகிறது. மேலும் 1–ம் மனுதாரரின் முன்பாத்தியஸ்தர் ஆன விசாலம் என்பவர் 1–ம் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த 15.07.2013 ஆம் தேதிய மா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது மற்றும் சட்டப்படி நடைமுறைப்படுத்தக்கூடிய ஆவணம் இல்லை என மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 44/2021 இம்மனுவின் 1–ம் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதும் தெரியவருகிறது.

(iv) மா.சா.ஆ.10 ஆன மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை பரிசீலிக்கையில் ராதாநல்லூர் கிராமம் புல

எண் 75–ல் ஹெக்டர் 2.15.50 மொத்த விஸ்தீரணமும், சுப்பையா படையாச்சி மகன் கஞ்சமலை பெயரில் அதாவது 1 முதல் 6 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பெயரில் பட்டா பதிவு செய்யப்பட்டிருந்தது என்பதும், பின்னிட்டு விசாரணையின் அடிப்படையில் 1–ம் மனுதாரரின் பெயர் புல எண் 75–ல் மொத்த விஸ்தீரணத்திற்கும் கூட்டாக பதிவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்பதும் அதன் அடிப்படையில் மா.சா.ஆ.11 ஆன மனு சொத்திற்கான சிட்டா 1 முதல் 6 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கஞ்சமலை மற்றும் 1–ம் மனுதாரர் பெயரில் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. 1–ம் மனுதாரர் 15.07.2013 ஆம் தேதிய கிரய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருவதற்காக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மா.சா.ஆ.10 மற்றும் மா.சா.ஆ.11–ஐ பரிசீலிக்கையில் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் புல எண் 75 –ல் மொத்த விஸ்தீரத்தில் 1–ம் மனுதாரர் மற்றும் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களின் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

(v) மா.சா.ஆ.12 –ல் 1–ம் மனுதாரர் புல எண் 75 –ல் ஹெக்டர் 1.15.5 பரப்பளவில் சவுக்கு சாகுபடி செய்து வருவதாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மா.சா.ஆ.12–ல் அனுபவதாரருடைய பெயர் கஞ்சமலை மற்றும் அனிதா என்றுதான் வழங்கப்பட்டுள்ளது. மா.சா.ஆ.12 ஆனது மனுவில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைக்குள் தான் 1–ம் மனுதாரர் சாகுபடி செய்து வருகிறார் என்பதை உறுதி செய்வதற்கு மனுதாரர் தரப்பில் எவ்வித சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை. மா.சா.ஆ.16 ஆன புகைப்படத்தின் அடிப்படையில் மனு சொத்தானது மனுதாரர்களின் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கான அறுதியான சான்றாவணமாக ஏற்றுக்கொள்ள இயலாது.

(vi) மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டள்ள சான்றாவணங்களின் அடிப்படையில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையே இதே

மனுசொத்து சம்மந்தமாக உரிமை மூலம் குறித்தும் சுவாதீனம் குறித்தும் உரிமையியல் வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்பது தெளிவாகிறது. மேலும் மா.சா.ஆ.10, மா.சா.ஆ.11 –ன் படியே புல எண் 75–ல் 1–ம் மனுதாரர் மற்றும் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பெயர் கூட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளதால், மனு சொத்தில் மனுதாரர்களின் தனிப்பட்ட சுவாதீனத்தை மெய்ப்பிக்க கூடிய வகையில் எவ்வித சான்றாவணமும் மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(vii) மனுதாரர் தரப்பு ஆவணங்களின் அடிப்படையில் மனு சொத்தானது மனுதாரர்களின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்பதற்கு எவ்விதமான முதல் நோக்கு வழக்கும் சமநிலை வாய்ப்பும் மனுதாரர்களுக்கு சாதகமாக இல்லை என்பதால் மனுதாரர்கள் கோரியுள்ள இடைக்கால தடை உறுத்துக் கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில், இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை –

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 15.07.2013 | அனிதா என்பவருக்கு விசாலம் எழுதிக்கொடுத்த சுத்த கிரய சானத்தின் சார் பதிவக நகல் |
| ம.சா.ஆ.2 | -- | அசல் வழக்கு எண்.112/2020-ன் வழக்குரையின் நகல் |
| ம.சா.ஆ.3 | 08.08.2013 | இளங்கோவன் என்வருக்கு 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் எழுதிக்கொடுத்த சுத்த கிரய சாசனத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.4 | 27.12.2023 | இளங்கோவன் என்பருக்கு 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் எழுதிக்கொடுத்த சுத்த கிரய சாசனத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.5 | 30.07.2016 | மகேஷ் என்பவருக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் வழங்கிய மேலெழுத்து கடிதம் |
| ம.சா.ஆ.6 | 30.12.1947 | முத்தம்மாளுக்கு செல்வநாயகம் பிள்ளை எழுதிக்கொடுத்த சுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | 03.01.1948 | முத்தம்மாளுக்கு கலியபெருமாள் படையாட்சி, தனுசு படையாட்சி, சசி ஆகிய மூன்று நபர்கள் எழுதிக்கொடுத்த சுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | 09.10.1948 | முத்தம்மாளுக்கு அம்பலவாணன் எழுதிக்கொடுத்த சுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | 04.04.1949 | முத்தம்மாளுக்கு அமிர்தலிங்கம் பிள்ளை எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.10 | 02.02.2021 | மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறை கடிதத்தின் அசல் |
| ம.சா.ஆ.11 | 15.09.2021 | சுப்பையா படையாட்சி பெயரல் வழங்கப்பட்ட பட்டாவின் கணினி நகல் |
| ம.சா.ஆ.12 | 09.06.2022 | 80, ராதாநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மகேஷ் மனைவி அனிதா |

| | | |
|---|---|---|
| | | என்பவருக்கு வழுங்கப்பட்ட அடங்கல் கணக்கு பதிவேட்டின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.13 | 09.06.2022 | 80, ராதாநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மகேஷ் மனைவி அனிதா என்பவருக்கு வழுங்கப்பட்ட சிட்டா பதிவேட்டின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.14 | 03.01.2014 | கருணாகரன் என்பவருக்கு விசாலம் என்பவர் எழுதிக்கொடுத்த சுத்த கிரய சாசனதின் சார் பதிவக நகல் |
| ம.சா.ஆ.15 | 20.04.2009 | மனோகரன் என்பவருக்கு விசாலம் என்பவர் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.16 | -- | 3 புகைப்படங்கள் மற்றும் 1 சி.டி |

<u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை -

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 16.02.2021 | மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.44/2021 தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 15.11.2022 | மனோகரன் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ன் படி தமிழ்நாடு அரசுக்கு கொடுக்கப்பட்ட சான்றின் கடிதம் |
| எ.ம.சா.ஆ.3 | 04.12.2022 | மனோகரனுக்கு கரூவூல கணக்குதுறையின் மூலம் அனுப்பட்ட பதில் கடிதம் |

(ஒம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.3/2020-ல்
அசல் வழக்கு எண்.232/2020
நாள்.15.12.2023.